**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை :– திருமதி S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
**சார்பு நீதிபதி, சீர்காழி.**

––––

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண். 88/2023 ல் இடைமனு எண். 2/2025**

தாமோதரன் ..மனுதாரர் / வாதி

..எதிர்..

1. மீராபாய்(இறந்துவிட்டார்)
2. மணிமேகலை
3. ஜோதி
4. திலகவதி
5. வசந்தகுமார்
6. கோதை
7. கவிதா
8. தனலெட்சுமி
9. செந்தில்குமார் .... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 12.09.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஜி. ஜெகதராஜ், அவர்கள் ஆஜராகியும், 1 ம் பிரதிவாதி இறந்துவிட்டார். 2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர்.வேணுகோபாலான் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கின் பிராதில் திருத்தம் செய்ய அனுமதி வேண்டி உ.வி.மு.ச. கட்டளை 6, விதி 17, 18 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி. அசல் வழக்கானது மனுதாரரின் தந்தையின்

சொத்தில் பாகம் கோரி வழக்க தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் தந்தை இறந்துவிட்டார். 1 முதல் 8 வரையான பிரதிவாதிகள் அவருடைய சொத்துக்கு பாகஸ்தாரர்கள் ஆவார்கள். அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி மனுதாரரின் தாயார் அசல் வழக்கு தாக்கல் செய்த பிறகு இறந்துவிட்டதால், அவருடைய வாரிசுகளை அசல் வழக்கில் சேர்த்து வழக்கு நடத்திட வேண்டியது அவசியமாக உள்ளது. அவருடைய சட்ட வாரிசுகள் மனுதாரர் மற்றும் 2, 3, 4 பிரதிவாதிகள் மற்றும் 8ம் பிரதிவாதி கணவர் வேணுவிற்காக அவருடைய மனைவி சட்ட வாரிசாகவும், 5, 6, 7 பிரதிவாதிகளின் தந்தையின் பாகத்திற்காக அவர்களையும் தரப்பினராக சேர்த்துள்ளதால், அவர் சட்ட வாரிசுகளுக்கிடையேயான விகித சொத்து விபரத்தினையும் குறிப்பிட்டு அசல் வழக்கின் பிராதில் திருத்தம் செய்ய வேண்டி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. <u>9 முதல் 11 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனுதாரரின் மனு நிலைநிற்கதல்ல. தாவா சொத்து என்பது சொத்து விபரத்தில் புல எண் போட்டு நான்கெல்லை போட்டு எவ்வளவு விஸ்தீரணம் என்று சொல்லாமல் பூரா என்பது விளக்கம் புரியவில்லை. இதில் நான்கெல்லையில் சந்திரகாசு மற்றும் பாக்கியலெட்சுமி தஸ்தாவேஜிக்கள் போர்ஜரியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு அவர்களை இந்த வழக்கில் சேர்க்க வேண்டியது அவசியமில்லை என்பதால், அசல் வழக்கில் திருத்தம் மேற்கொள்ள வேண்டியது அவசியமில்லை. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யக் கோரியுள்ளார்.

4. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5. <u>தீர்வு.</u>

மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், அசல் வழக்கானது மனுதாரர் தந்தையின் சொத்துக்கள் குறித்து பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கில் மனுதாரரின் தாயாரான முதல் பிரதிவாதி, வழக்கு தாக்கல் செய்த பிறகு இறந்துவிட்டதால், அவரது வாரிசுகளை வழக்கில் சேர்த்து வழக்கை மேல் நடத்த வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், மனுதாரரின் தாயாருக்கு மனுதாரர், 2, 3, 4 பிரதிவாதிகள் மற்றும் 8ம் பிரதிவாதி கணவர், 5, 6, 7 பிரதிவாதிகளின் தந்தை

வாரிசுகள் என்றும், எனவே, அசல் வழக்கில் முதல் பிரதிவாதியின் வாரிசுகள் தரப்பினர்களாக உள்ளதால் சட்ட வாரிசுகளுக்கு இடையேயான சொத்து விகிதத்தை குறித்து திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளதால் மனுவை அனுமதிக்க கோரியுள்ளார். இதற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடுமையான ஆட்சேபணை எதுவும் இல்லை. வழக்கு ஆவணங்களின் பரிசீலனையில் அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வரும் நிலையில், முதல் பிரதிவாதி இறந்துவிட்டதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் இந்த திருத்த மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. எனவே மனுதாரர் தரப்பில் மனுதாரரின் தாயாரான முதல் பிரதிவாதியின் வாரிசுகள் ஏற்கனவே அசல் வழக்கில் தரப்பினர்களாக உள்ளதால் முதல் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார் என்பதையும், தரப்பினர்களின் பங்கு விகிதத்தில் திருத்தம் மேற்கொள்ளவும் அனுமதி கோரியுள்ள இம்மனுவை நீதியின் நலன் கருதி அனுமதிக்கலாம் என்று தீர்மானித்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**7. முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

**(ஒம்/–..S.** மும்தாஜ்)

சார்பு நீதிபதி.
சீர்காழி

<u>**பின் இணைப்பு**</u>

<u>**மனுதாரர்கள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்**</u> – இல்லை–
<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u> – இல்லை–

சார்பு நீதிபதி,
சீர்காழி.

நேரிய / வரைவு உத்தரவு
இ.ம.எண்.2/2025–ல்
அசல்வழக்கு எண்.88/2023
நாள் –14.10.2025